# காற்றில் மிதக்கும் நீலம் கவிதைகளில் வாழ்வியல் சிந்தனைகள்

ச.மாரிச்செல்வம்

பதிவு எண்:21222014022014,பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,

தமிழாய்வு மையம், ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி,

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்றது,

அபிஷேகப்பட்டி,திருநெல்வேலி-627012

முனைவர்.கு.நீதா

நெறியாளர்&இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை &தமிழாய்வுமையம்,

ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி-628002.

13

ஆய்வுநோக்கம்:

பாமர மக்களும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் அமைந்த இலக்கிய வடிவங்களில் ஒன்று புதுக்கவிதை. காற்றில் மிதக்கும் நீலம் கவிதைத் தொகுப்பின் வாயிலாக வாழ்வியல் நிலைகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறவுச் சொற்கள்:

காற்றில் மிதக்கும் நீலம், வெளிநாட்டு மோகம் , சொல், விவசாயம்

ஆய்வுச்சுருக்கம்:

மனிதனின் வாழ்க்கையோடு இயைந்த கற்பனை நிறைந்த இலக்கிய வகைகளில் ஒன்று புதுக்கவிதையாகும். தற்கால பெண்கவிஞர்களில் ஒருவரான சக்தி ஜோதியின் கவிதைகளில் வாழ்வியல் சிந்தனைகள் அதிகம் இடம்பெற்றுள்ளன. சக்திஜோதியின் படைப்புகளுள் ஒன்றான காற்றில் மிதக்கும் நீலம் எனும் கவிதைத் தொகுப்பில் அமைந்த இன்றையகால மக்களின் வாழ்வியல் முறைகளைப் பற்றி எடுத்துரைப்பதாக இவ்வாய்வு அமைகிறது.

முன்னுரை:

மக்களின் வாழ்க்கையே பெரும்பாலும் இலக்கியத்தின் பாடுபொருள் ஆகிவிடுகிறது.படைப்பாளிகள் தம் கண்ணால் கண்ட நிகழ்வுகளைக் கற்பனைத் தோன்ற எழுதுகின்றனர். இலக்கியங்கள் இக்கால மக்களின் வாழ்க்கையை மட்டும் எடுத்துரைப்பதாக இல்லாமல் வருங்காலத் தலைமுறையினரின் நலனுக்காக நாம் செய்யவேண்டிய செயல்களையும் இடித்துரைப்பதாக அமைகிறது.இக்கால இலக்கிய வடிவங்களில் ஒன்றான புதுக்கவிதை வாழ்வியல் சார்ந்தக் கருத்துக்களை மக்களிடையே கொண்டு செல்வதை நோக்கமாக கொண்டுள்ளது.

படைப்பும் படைப்பாளியும்:

காற்றில் மிதக்கும் நீலம் எனும் கவிதை த் தொகுப்பின் ஆசிரியர் சக்தி ஜோதி .இவர் 12 கவிதைத்தொகுப்புகள் மற்றும் இரண்டு கட்டுரைத்தொகுப்புகளை வெளியிட்டுள்ளார் .வாழும் கவிஞரான இவர் தான் காணும் மனிதர்களையும் அவர் தம் வாழ்வியல் அனுபவங்களையும் மனதில் நிறுத்தி அதனைக் கவிதையின் பாடுபொருளாக்குகின்றார்.

வாழ வைக்கும் சொல்:

நாம் பயன்படுத்தும் சொற்களில் மிகவும் கவனம் தேவை . பயனுள்ள சொற்களை மட்டும் பயன்படுத்துவது மனிதனின் வாழ்விற்கு மேன்மை அளிக்கும் . ஒரு சொல் வாழவும் வைக்கும் ;சாகவும் வைக்கும் என்பது மூத்தோர் வாக்கு.

“ஒரு சொல் என்பது ஒருவனை வாழ வைக்குமென்றால்
அந்த சொல்லைச் சொல்வேன்”(கா.மி.நீ-பக்.92)

என்று கூறுவதன் மூலம் ஒரு சொல் ஒருவனுக்கு நல்ல வாழ்க்கையை அளிக்கும் என்றால் அதை சொல்வதில் தவறில்லை என்பதை புலப்படுத்துகிறார்.

“பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்”[1] (கு.எண்-292) . என்கிறார் வள்ளுவர்.

வியாபாரப் பொருளான இறைவன்:

பழங்காலத்தில் இறைவழிபாடு எளிமையாக இருந்தது.மரம் மற்றும் நீர்நிலைகளின் அருகில் கடவுள்சிலைகளை வைத்து வழிபட்டு வந்தனர்.காலமாற்றத்திற்கேற்ப கோயில்களின் அமைப்பில் மாற்றம் ஏற்பட்டது.இக்காலத்தில் இறைவனைத் தரிசிப்பதற்குப் பணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கடவுளின் முன் அனைவரும் சமம் என்று கூறினாலும் பணம் இருப்பவன் மட்டுமே இறைவனை அருகில் சென்று காணமுடிகின்றது . நீண்ட நேரம் அங்கு நின்று இறைவனை தரிசிக்க முடிகிறது. “ஒருவரும் என்னை தரிசிக்க விரும்பவில்லை
மேலும் நான் வியாபாரப்பொருளாகி விட்டேன்
வியாபாரிகள் யாரொருவரையும் பார்க்க விரும்பவில்லை”(கா.மி.நீ-பக்.45)

என்பதன் மூலம் ஆண்டவன் தன்னை வியாபாரப் பொருளாக்கி வழிபடுவதை விரும்பவில்லை என்பது புலனாகிறது.

“காசு தந்தால்தான்உன்னைக்
காணும் வழிகாட்டுவதாய்
கதவு போட்டுப்பூட்டிவைத்துக்
கட்டாயம் பண்ணுவதைபார்த்தாயா ”[2] என்கிறார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.ஏழை எளியவர்கள், பணக்காரர்கள் என்ற பாகுபாடுஇன்றி அனைவரும் பணம் செலுத்தாமல் வழிபடும் உரிமையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

விவசாயத்தின் நிலை:

விவசாயம் செய்து வாழ்பவர்கள் அக்காலத்தில் போற்றுதலுக்கு உரியவர்களாக இருந்தனர்.தற்போது விவசாயத்தை விரும்பி செய்பவர்கள் மிகவும் குறைந்து வருகின்றனர்.

“கம்ப்யூட்டர் விவசாயம் கற்றுக்கொண்ட காவியாவுக்கு
பின்பொருநாளில் விவசாயம் செய்ய நிலமிருக்கிறதா
விதைகளை எங்கு கண்டடைவது
என்பவற்றை அறியாமலிருந்தால்”(கா.மி.நீ-பக்.69) .என்ற கவிதை வாயிலாக ஆசிரியர்

கணினி மற்றும் செல்போன்களில்
விளையாடும் விளையாட்டாக மட்டுமே விவசாயத்தைக் குழந்தைகள் அறிந்துகொள்ளும் நிலையை எடுத்துரைக்கிறார்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர் ""[3](கு.எண்-1033) .என்பது வள்ளுவர் வாக்கு.குழந்தைகளுக்கு விதைகளிட்டு மரம்,செடி,கொடிகள் வளர்ப்பதைக் கற்றுக்கொடுப்பதன் மூலம் விவசாயத்தினை அழியவிடாமல் காக்க இயலும்.

வெளிநாட்டுமோகம்:

நம் முன்னோர்கள் பலர் நம் நாட்டின் முன்னேற்றத்திற்காக எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி உழைத்து உயிர் நீத்துள்ளனர் .இக்காலத் தலைமுறையினர் மேல்படிப்பு ,வேலை என பல காரணங்களுக்காக வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். வீடு,மனைவி,குழந்தைகள்,பெற்றோர் என அனைவரையும் விட்டுவிட்டுத் தனித்து வெளிநாடுகளில் அல்லல்படுபவர்களும் உண்டு.

"மழையற்று வறண்டநிலம் பிளந்திருக்கிறது
இந்த மண்வாசனை நீ நுகர்கையில்
இந்த நிலத்தின் சுனை பெருகத் தொடங்கும்"(கா.மி.நீ-பக்.24-25)

என்பது வெளிநாட்டு மோகத்தால் அங்கு செல்வதை விட்டுவிட்டு நம் மண்ணின் மணம் உணர்ந்தால் நம் நாட்டின் வளம் மேன்மேலும் பெருகும் என்பதை புலப்படுத்துகிறது.

"என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில் ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்""[4] என்று திரையிசைப் பாடல் ஒன்று கூறுகின்றது. வெளிநாட்டிற்குச் சென்று நம் அறிவை அவன் நாட்டின் வளர்ச்சிக்கு அளிப்பதை விட நம் நாட்டின் வளர்ச்சிக்கு நமது அறிவைப் பயன்படுத்தினால் நாடு முன்னேறுவதோடு நம் எதிர்கால சந்ததியினரும் பயன்பெறுவர்.

தொழிலாளர்கள் நிலை:

கடின உழைப்பின் மூலம் சாதிக்க இயலாதது என்பது எதுவும் இல்லை.

"பதினைந்துநாட்களுக்கு மேல் எனில் பதற்றமடைவோம் எவ்வாறு சமாளிப்பதென"(கா.மி.நீ-பக்.-47). மாதம் முழுவதும் உழைக்கும் மக்கள் சம்பளத்திற்காக எப்போது மாதத்தின் முதல் நாள் வரும் என்று எண்ணி காத்திருப்பர் .முதல் நாள் வரவேண்டிய சம்பளம் பத்து ,பதினைந்து நாட்கள் தள்ளி கிடைக்கும்போது அவர்களின் குடும்பத்தின் நிலைமை மிகவும் கஷ்டமாகிவிடுகிறது .அவசரமாக மருத்துவச்செலவுக்குக் கூட பிறரிடம் கடன் வாங்கி சமாளிக்க வேண்டிய நிலைக்கு ஆளாகின்றனர் . செய்யும் தொழில் எதுவாக இருப்பினும் கடினமாக உழைக்கும் தொழிலாளர்கள் நிலையினை

"கையிலே வாங்கினேன் பையிலே போடலே
காசுபோன இடம்தெரியலே"[5.] என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் கூறுகிறார்.

பெண்களின் நிலை:

பெண்கள் பல துறைகளில் முன்னேறி வருகின்றனர் . பெண்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகும் பிரச்சனைகளில் ஒன்று பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாவதாகும்.

“கண்ணனே அறிவான் மேலும்

கண்ணனை தேடிக் கொண்டிருப்பது

அவள் ஒருத்தி மட்டும்அல்ல என்பதையும்”(கா.மி.நீ-பக்.102) என்பது துச்சாதனன் திரௌபதியின் துகிலுரியும்போது கண்ணன் வந்து காத்தது போல தன்னைக் காக்க யாராவது வருவார்களா என எண்ணும் பெண்களின் நிலையை உணர்த்துகிறது . தன்னை காக்க யாரும் தேவையில்லை என்னை காத்துக் கொள்ள என்னால் இயலும் என்று மனநிலையை பெண்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

தொகுப்புரை:

காற்றில் மிதக்கும் நீலம் கவிதைத்தொகுப்பில் உள்ள கவிதைகள் மாதம் முழுவதும் உழைக்கும் ஏழைத் தொழிலாளர்கள் ஊதியத்திற்காக காத்திருக்கும் நிலையினைப் புலப்படுத்துகிறது.வெளிநாட்டு மோகம் துறந்து நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு வழி வகுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது . இறைவன் வியாபார பொருளாகிவிட்ட அவலநிலையினை வெளிப்படுத்துகிறது. இன்றைய சூழலில் விவசாயத்திற்கு முக்கியத்துவம் தராமல் விவசாயநிலங்கள் தொழிற்சாலைகள் ஆக்கப்படுவதால் நாளைய விவசாயம் கேள்விக்குறியாகும் நிலையினைப் புலப்படுத்துகிறது. குழந்தைகள் முதல் முதியோர்கள் வரை உள்ள பெண்களுக்கு பாலியல் துன்புறுத்தல் பிரச்சனைகள் மிகுந்து வரும் சூழலினை எடுத்தியம்புகிறது.

முடிவுரை:

தொழிலாளர்களின் நிலை மற்றும் வெளிநாட்டுமோகம்,விவசாயம் அழிந்துவரும் நிலை,இறைவன் வியாபாரப்பொருளாகுதல், மற்றும் பாலியல் துன்புறுத்தல் பெருகி வரும் நிலை போன்றவை வழியாக இன்றைய சமுதாயத்தில் அமைந்த வாழ்வியல் சூழலை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

அடிக்குறிப்புகள்:

1.திருக்குறள்புதியஉரை,புலியூர்க்கேசிகன்(உ.ஆ).,ப.65., பூம்புகார்பதிப்பகம், சென்னை-14, 27 ஆம்பதிப்பு- பிப்ரவரி 2010

2.பாட்டாளிக்கவிஞன்பட்டுக்கோட்டைகல்யாணசுந்தரம்,கார்த்திகேயன்,ப.IX.,பாவைபிரிண்டர்ஸ்(பி) லிமிடெட்,சென்னை-14இரண்டாம்பதிப்பு-நவம்பர், 2012

3.திருக்குறள் புதிய உரை,புலியூர்க்கேசிகன்(உ.ஆ)., ப. 215., பூம்புகார் பதிப்பகம், சென்னை-14, 27 ஆம் பதிப்பு- பிப்ரவரி 2010

4.திரைக்கவிதிலகம்கவிஞர்.அ.மருதகாசிபாடல்கள்,தொகுதி-1,ப.31, பரணி பதிப்பகம், சென்னை-11,முதற்பதிப்பு-ஜீலை -1986

5.பாட்டாளிக்கவிஞன் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கார்த்திகேயன்,ப. 7., பாவை பிரிண்டர்ஸ்(பி) லிமிடெட்,சென்னை-14,இரண்டாம் பதிப்பு-நவம்பர், 2012.